
முத்துவின் பயணம்...
அணு மின் நிலையத்திற்குச் சுற்றுலா செல்வது பற்றிய கதை
TN 28 AP 1234
பகுதி-2

இது வரை இந்த கதையில் தற்போது நகரத்தில் வசிக்கும் ஒரு படித்த உள்ளூர் இளைஞனான சேகர் அணு சக்தி பற்றிய கலந்துரையாடலில் சக கிராமத்தினர்களுடன் இணைந்து, அணு அறிவியலை பற்றிய பல அவ நம்பிக்கைகளைத் தகர்த்து, இவை மனிதர்களுக்கு அளிக்கும் பல்வேறு நன்மைகளைப் பற்றி அவர்களுக்கு விவரிக்கிறார். அவருடைய தெளிவான மற்றும் எளிதான விவரங்கள் கிராமத்தினரால் நன்றாகப் புரிந்துக் கொள்ளப்படுகிறது, இப்போது அவர்கள், அணு சக்தி அவர்களுடைய வாழ்வில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி தரும் என்று மிகவும் நம்புகின்றனர். இப்போது கிராமத்தினர் அணு சக்தியைப் பற்றி அதிகம் தெரிந்துக் கொள்ள ஆர்வமாக உள்ளனர். விரைவில், அவர்கள் அனைவரும் ஒரு அணு மின் நிலையத்திற்கு வழிகாட்டுதலான சுற்றுலாவிற்குச் செல்ல முடிவு செய்கின்றனர்.

எனவே இப்போது அணு மின் நிலையத்திற்கான இந்த சுவாரஸ்யமான சுற்றுலாவில் நாமும் கலந்துக் கொள்ளலாம். முத்து மற்றும் கிராமத்தினர்கள் இதனை எப்படி மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றனர் என்று பார்க்கலாம்.





முந்தைய சந்திப்பில் சேகர் உடனான அவர்களின் கலந்துரையாடல்களின் அடிப்படையில், கிராமத்தினர்கள் தலைவரை சந்தித்து, அணு மின் நிலையத்திற்கான சுற்றுலா நிகழ்ச்சியை உறுதி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.
கிராமத் தலைவர் (சேகரிடம் தொலைபேசியில் பேசுகிறார்) ஹலோ, சேகர்!
வணக்கம், தாத்தா !
ஹலோ, சேகர்! முத்து மாமா, விஜயா அக்கா மற்றும் மற்ற கிராமத்தினர்கள் அனைவரும் அணு மின் நிலையத்திற்கு சுற்றுலா செல்ல தயாராக உள்ளனர்... நீங்கள் தயாரா?
கண்டிப்பாக தாத்தா, நான் தக்க அதிகாரிகளிடம் உங்கள் வருகை பற்றி பேசி... சற்று நேரத்தில் உங்களைத் திரும்பவும் அழைக்கிறேன்...
(சிறிது நேரம் கழித்து) ஹலோ, தாத்தா! ஹலோ! ஓ, சேகர்... நீஅவர்களிடம் பேசினாயா?


ஆம், தாத்தா, நான் அவர்களிடம் பேசினேன், அவர்கள் மகிழ்ச்சியாக சம்மதித்தனர்... நான் 2 நாட்களில் கிராமத்திற்குத் திரும்பி வந்து, உங்கள் அனைவரையும் அங்கு பார்க்கிறேன்... தயவு செய்து முத்து மாமா, பார்வதி அத்தை மற்றும் மற்ற கிராமத்தினர்களைத் தயாராக இருக்குமாறு கூறுங்கள்... நான் உங்கள் அனைவரையும் சென்னை அணு மின் நிலையத்திற்கு சுற்றுலா அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளுடன் 2 நாட்களில் வருகிறேன்... இப்போது நான் விடைபெறுகிறேன்... 2 நாட்களில் உங்களை சந்திக்கிறேன்... பை-பை, தாத்தா!
கடவுளின் ஆசிர்வாதம் உனக்கு இருக்கட்டும்!
என்ன, முத்து... இப்போது நாம் அனைவரும் அணு மின் நிலைய சுற்றுலா செல்லலாமா? ஹா... ஹா... ஹா...
நாங்கள் தயாராக உள்ளோம் ஆம் தலைவரே, பிறகு பார்க்கலாம்...
அனைவருக்கும் காலை வணக்கம்!
2 நாட்கள் கழித்து... அனைத்து கிராமத்தினரும் தலைவரின் ஐயாவின் வீட்டை அணுகுகின்றனர்...


காலை வணக்கம், தலைவரே ஐயா!
காலை வணக்கம்! நான் உங்களுக்காக தான் காத்துக் கொண்டிருக்கிறேன்...
சரி, தலைவரே, சேகர் எங்கே?.... அவன் இன்னும் இங்கு வரவில்லையா?
தலைவரே, நானும் அவனை இன்று இங்கு பார்க்கவில்லை.
அவன் நம்மிடம் விளையாடியுள்ளான் என்று நினைக்கிறேன்.
எனக்கு அவனை நன்றாகத் தெரியும். சிறியவனாக இருந்தபோது, அவன் மிகவும் குறும்புக்காரனாக இருந்தான்...
(கூட்டத்தில் சலசலப்பு ஏற்படுகிறது, அனைவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்...)


(சிரித்த முகத்துடன்...) இல்லை, இல்லை, அது போல் எதுவும் இருக்காது... தயவு செய்து பொறுமையாக இருங்கள்... அதோ அவன் வந்துவிட்டான்.
அதே நேரத்தில், சேகர் ஒரு பெரிய பேருந்திலிருந்து கீழே இறங்கி, கூட்டத்தை நோக்கி வந்தான்...
வணக்கம், தாத்தா!
உன்னை பார்ப்பதில் மகிழ்ச்சி... நீ சரியான நேரத்திற்கு வந்துவிட்டாய்.
அனைவருக்கும் வணக்கம்! நீங்கள் அனைவரும் இன்று பார்க்க அழகாக உள்ளீர்கள்... ஆம், முத்து மாமா... நீங்கள் இன்று மிகவும் மகிழ்ச்சியாகத் தெரிகிறீர்கள்.
ஆம், சேகர், நாங்கள் அனைவரும் அணு மின் நிலையத்திற்குச் சுற்றுலா செல்வது குறித்து மகிழ்ச்சியாக உள்ளோம்... நாங்கள் அது எவ்வளவு பெரிதாக இருக்குமென்று யோசிக்கிறோம்.
ஆம், சேகர், நாங்கள் அனைவரும் அணு மின் நிலையத்தைப் பார்ப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளோம்.


சரி, நாம் புறப்படலாம். நாம் எதற்காகக் காத்திருக்கிறோம்? நீங்கள் அனைவரும் பேருந்தில் அமருங்கள், நாம் விரைவில் அங்கு சென்றுவிடலாம்.
அவர்கள் அனைவரும் பேருந்தை நோக்கி நடக்க துவங்கினர்.
பேருந்து சற்று நேரத்தில் புறப்படுகிறது...
முத்து மாமா... நீங்கள் எப்படி உணர்கிறீர்கள், நீங்கள் மகிழ்ச்சியாக உள்ளீர்கள் என்று நம்புகிறேன்.
ஆம்... நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளோம், ஆனால் பேருந்து எப்போது அங்கு சென்றடையுமென்று காத்துக் கொண்டிருக்கிறோம்..... ஆனால்..........
என்னவாயிற்று, நீங்கள் என்ன கேட்க விரும்புகிறீர்கள்?
உனக்கும் அணு மின் நிலையத்துக்கும் என்ன தொடர்பு என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறோம் ?... உன்னால் எப்படி இவ்வளவு தகவலை பெற முடிந்தது? இது எப்படி உனக்கு சாத்தியமானது?


(சேகர் சிரித்துக் கொண்டே.....) நீங்கள் என்னை இப்படி கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும்... நான் பொறியியல் படித்துக் கொண்டிருக்கும்போது, அங்கு 2 மாதங்கள் பயிற்சியாளர்களாக அனுப்பப்பட்டிருந்தோம்... 2 மாதங்கள் பயிற்சியில் இருக்கும்போது, நான் அனைத்து செயல்பாடுகளையும் மிகவும் நெருக்கமாகப் பார்த்துள்ளேன். அதனால் தான் என்னால் அணு சக்தியைப் பற்றி இவ்வளவு விவரிக்க முடிந்தது... உங்களுக்குப் புரிந்திருக்குமென்று நம்புகிறேன், மாமா...
புரிந்துக் கொண்டேன், நீ மிகவும் புத்திசாலியாகிவிட்டாய்.
ஆ.... நாம் வந்துவிட்டோம்... நாம் பேருந்திலிருந்து கீழே இறங்கி, ஏதேனும் ஒரு பக்கமாக நிற்கலாம். அதே நேரம், நான் பாதுகாப்பு நபர்களிடம் பேசுகிறேன்...
(பேருந்து அணு மின் நிலையத்தின் நுழைவாயிலை அடைகிறது)
மதராஸ் அணுமின் நிலையம்
மதராஸ் அணுமின் நிலையம்
ஆம், சேகர்... நீ கூறியதைப் போல் செய்யலாம்.
கிராமத்தினர்கள் அனைவரும் கீழிறங்கி, ஒரு பக்கமாக நிற்கின்றனர்... அவர்கள் அனைவரும் நுழைவாயிலில் உள்ள பாதுகாப்பு நிலையைப் பார்த்து மிகவும் ஆச்சிரியப்படுகின்றனர்
மதராஸ் அணுமின் நிலையம்
அதே நேரம், முத்து மற்றும் மற்ற நபர்கள் நுழைவாயிலுக்குள் எட்டிப்பார்க்க முயன்றனர்...
சேகர் நுழைவாயிலின் அருகில் உள்ள பாதுகாப்பு அறைக்கு நடந்துச் சென்றான்...
யாரேனும் மொபைல், கேமரா அல்லது மற்ற மின் சாதனங்களை வைத்துள்ளீர்களா? நாங்கள் அதனை ஒப்படைக்குமாறு உங்களை கேட்டுக் கொள்கிறோம். இவை அணு மின் நிலைய வளாகத்திற்குள் தடைசெய்யப்பட்டுள்ளது.
நீங்கள் அனைவரும் இப்போது தனிப்பட்ட கேட் பாஸ்களை பெறலாம்...
(அவர்கள் அனைவரும் அவர்களுடைய மொபைல்கள் மற்றும் கேமராக்களை ஒப்படைத்தனர்)
தயவு செய்து ஒவ்வொருவராக வந்து, உங்கள் ஐ.டி. கார்டுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



அதே நேரம், சேகர் இரண்டு பிரதிநிதிகளுடன் நுழைவாயிலை அடைகிறான்.
சேகர் ஐயா... அனைத்து நபர்களுக்குமான கேட் பாஸ்கள் தயாராக உள்ளன, இப்போது நாம் பேருந்துக்குத் திரும்ப செல்லலாம், பிறகு நாம் அணு மின் நிலையத்திற்குள் நுழையலாம். அங்கு மற்றொரு நிலை பாதுகாப்பு பரிசோதனை உள்ளது. அங்கு அவர்கள் பைகளை ஸ்கேன் செய்துவிட்டு, நம்மை நுழைய அனுமதிப்பார்கள்.
மிகவும் நன்றி, ஐயா.
மாமா, இவர் திரு. அசோக் குமார், இவர் இந்த சுற்றுலாவிற்கு நம் வழிகாட்டியாக இருப்பார்.
சேகர் கிராமத்தினர்களை பிரதிநிதிக்கு அறிமுகம் செய்தார்.
ஹலோ, அனைவரையும் சென்னை அணு மின் நிலையத்திற் வரவேற்கிறோம்... உள்ளே வாருங்கள்.
அவர்கள் அனைவரும் பேருந்துக்கு திரும்பிச் சென்றனர். பேருந்து பிரதான நுழைவாயிலுக்குள் சென்றது.
NPCIL


அனைவருக்கும் வணக்கம், நாம் இப்போது கடந்துச் செல்லும் பகுதி தடை செய்யப்பட்ட பகுதி எனப்படும். முன் அனுமதியின்றி இந்த பகுதிக்குள் நுழைய யாருக்கும் அனுமதி இல்லை.
இது எதற்கு பயன்படுத்தப்படுகிறது?
உண்மையில் இந்த 1.6 கி.மீ. பகுதியில், நாங்கள் பசுமை மற்றும் அடர்ந்த காட்டை பராமரிக்கிறோம். இது பல்வேறு பறவைகள் மற்றும் பட்டாம்பூச்சிகளின் வசிப்பிடமாக உள்ளது. இங்கு உள்ள சூழல் தூய்மையானதாகவும், இயற்கையானதாகவும் இருப்பதற்கு இது அத்தாட்சியாக உள்ளது.
ஆ, இங்கு மிகவும் பசுமையாக உள்ளது மற்றும் சூழலும் மிகவும் தூய்மையானதாகத் தெரிகிறது... நாம் இங்குச் சென்று, பறவைகள் மற்றும் பட்டாம்பூச்சிகளைப் பார்க்கலாமா?
என் கூடாது? ஓட்டுநரே, தயவு செய்து இடது புறம் பேருந்தை நிறுத்துங்கள்.
பேருந்து நின்றது, அனைவரும் கீழிறங்கி, சுற்றுப்புறத்தை ஆராயத் துவங்கினர்.



ஆ, எவ்வளவு அழகான காட்சி?
மிகவும் அழகாக உள்ளது, இங்குவந்து இந்த பறவைகளையும் பாருங்கள்!


ஓ. அந்த மயில் மிகவும் அழகாக உள்ளது. இந்த காட்சியை பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது.


இது நிச்சயமாக, மிகவும் முக்கியமான பகுதி, இது பறவைகள், தாவரங்கள் மற்றும் பல விலங்குகளைப் பாதுகாப்பதற்கான இடமாக மட்டும் பயனளிக்கவில்லை, இது மின் நிலையத்தில் விபத்து நேர்ந்தால் கதிர்வீச்சின் தாக்கத்தை குறைக்கவும் உதவுகிறது.
ஓ! இது தான் அணு மின் நிலையத்தைச் சுற்றி 1.6 கி.மீ. விட்டத்தைக் கொண்ட தடை செய்யப்பட்ட பகுதி பராமரிக்கப்படுவதற்கான காரணமா..?
(அனைவரும் பேருந்துக்குள் திரும்பி வந்துவிட்டனர்... பிறகு அவர்கள் அனைவரும் மின் நிலையத்தின் இரண்டாவது நுழைவாயிலை அடைந்தனர்)
இப்போது, அனைவரும்... ஒவ்வொருவராக... கீழிறங்குங்கள், இங்கிருந்து, ஒரு பாதுகாப்பு பரிசோதனைக்குப் பிறகு, நாம் அணு மின் நிலையத்திற்குள் நுழையலாம்.
சரி, ஐயா. (அனைவரும் பேருந்திலிருந்து இறங்கி, பாதுகாப்பு பரிசோதனைக்குப் பிறகு, அணு மின் நிலையத்திற்குள் நுழைந்தனர்)
பாதுகாப்பு பரிசோதனை மையம் வழியாக உள்ளே செல்கின்றனர்


அவர்கள் நுழைவு வாயிலுக்குள் நுழையும்போது, அது அவர்களை கவரக்கூடியதாய் இருக்கிறது... அனைவரும் அதைப் பார்த்து ஆச்சிரியமடைகின்றனர்.
ஓ... இது மிகவும் பெரிதாகவும் பிரமாண்டமாகவும் உள்ளது!
ஆம், இது உண்மையில் கவரக்கூடியதாய் உள்ளது!








நீங்கள் பார்க்கும் இந்த வட்டமான காப்பறை அணு உலை கட்டிடம் எனப்படும். இது அணு மின் நிலையத்தின் முக்கிய இடமாகும். இங்கிருந்துதான் உண்மையான வெப்பம் உருவாக்க நிகழ்முறை துவங்குகிறது. முக்கியமாக, இது 2 சுவர்களைக் கொண்டுள்ளது. 1வது சுவர் மற்றும் 2வது சுவர், இரண்டும் கான்க்ரீட்டால் ஆனது, இவை மிகவும் வலிமையானது.


அப்படியா.... நாம் இந்த சுவர்களின் உட்புறத்தைப் பார்க்கலாமா.





ஏன் கூடாது? நிச்சயமாக... இது மிகவும் எளிது. நீங்கள் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட உடைகள் மற்றும் கையுறைகளை அணிந்தால் போதும்.
வாருங்கள்... நான் இதன் உள்ளே உங்களை அழைத்துச் செல்கிறேன்.
விசேஷ வகை துணி, கையுறைகள் மற்றும் டி.எல்.டி. டோசிமீட்டர் எனப்படும் சாதனத்துடன் அனைவரும் உள்ளே நுழைந்தனர்.
ஐயா, நம் வீடுகள் ஒற்றை சுவர்களைக் கொண்டுள்ளன, ஆனால் இங்கு ஏன் 2 சுவர் அடுக்குகள் உள்ளன என்று தயவு செய்து உங்களால் விவரிக்க முடியுமா.
நல்ல கேள்வி, முத்து... இந்த 2 சுவர்கள் பாதுகாப்பு காரணத்திற்காக அமைக்கப்பட்டுள்ளன. விபத்து நேர்ந்தால், பிரதான சுவர் முதலில் அனைத்து கதிர்வீச்சையும் தடுக்கும். ஆயினும், சில அபூர்வமான சூழ்நிலையில், சில கதிர்வீச்சு முதல் சுவர் வழியே கடந்துச் சென்றால், இரண்டாவது சுவர் கதிர்வீச்சைமுற்றிலும் தடைசெய்யும். கதிர்வீச்சைமேலும் தடை செய்ய 2 சுவர்களுக்கு இடையே காலி இடம் உள்ளது. இப்போது நாங்கள் ஏன் 2 சுவர்களை உருவாக்கியுள்ளோம் என்று உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.
இந்த சுவர்கள் மிகவும் வலிமையாக உள்ளதா, இவை உடைந்துவிடுமா?



ஹா, ஹா, ஹா... (சிரிக்கும் போது)... ஐயா, விமானம் தாக்கினாலும் இந்த சுவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த சுவர்கள் மிக வலிமையாக உருவாக்கப்பட்டுள்ளன... மேலும் ஒரு விஷயம். முதல் சுவரின் அகலம் கிட்டத்தட்ட 1 மீட்டர் இருக்கும்.
அப்படியா?
இப்போது, வருகையாளர்கள் அணு உலை கட்டடம் வழியே கடந்துச் சென்று, கேலெண்ட்ரியாவை அடைகின்றனர். அங்கு அவர்கள் ஒரு சிறிய கண்ணாடி ஜன்னலை பார்த்தனர்... அனைவரும் ஆர்வமாக உள்ளே பார்க்க முயற்சி செய்தனர்.
இது என்ன? இங்கு நிறைய சிறிய ஓட்டைகள் உள்ளனவே!
ஆம்! இதனுள் உள்ள வட்டமான பொருள் என்ன?


நம் உடலில் இருதயம் ஒரு மிக முக்கிய பகுதியாக இருப்பதை போல், அணு மின் நிலையமும் கேலண்ட்ரியா எனப்படும் இந்த பகுதியை கொண்டுள்ளது. இதில் நாம் யுரேனியம் எனப்படும் எரிபொருளை பயன்படுத்துகிறோம். யுரேனியம் அணுக்களின் பிளவுகள் இங்கு நடை பெறும். இது அதிக அளவு சக்தி வெளியிட வழிவகுக்கும், இது சுற்றியுள்ள நீரை சூடாக்கும். இறுதியாக, இது ஆவியை உருவாக்க கொதிகலனில் உள்ள நீரை சூடாக்கும். இந்த ஆவி டர்பைனின் பிளேடுகளைச் சுழலச் செய்யும், இது இறுதியில் ஜெனரேட்டருடன் இணைக்கப்பட்டிருக்கும், இது இறுதியாக மின்சாரத்தைத் தயாரிக்கும். இந்த ஜெனரேட்டர்கள் மேலும் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டிருக்கும். மின்சாரம் பிறகு மின் கட்டமைப்பிலிருந்து டிரான்ஸ்ஃபார்மர்கள் மற்றும் கம்பி வலையமைப்புகள் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் விநியோகிக்கப்படும்.
அனைவரும் அவர் கூறுவதை கவனமாகக் கேட்கின்றனர்
ஐயா, எனக்கு ஒரு சந்தேகம்: மின்சாரத்தை தயாரிக்கும் நிகழ்முறையில் எரிபொருள் தீர்ந்துப் போகிறது. இங்கு யாரும் நுழைய மாட்டார்கள் என்றால் பிறகு எப்படி இந்த எரிபொருளை மீண்டும் நிரப்புவீர்கள்?
இந்த கேள்வி குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்... நீங்கள் சுவாரஸ்யமான கேள்வியை கேட்டுள்ளீர்கள். உண்மையில், மனிதர்கள் உள்ளே நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது என்பதால் இந்த செயல்பாடு கணினிமயமாக்கப்பட்டுள்ளது மற்றும் இயந்திரத்தின் உதவியுடன் எங்களால் இந்த எரிபொருளை மீண்டும் நிரப்ப முடிகிறது...
இதற்கு பிறகு, அனைவரும் அணு உலை அறையிலிருந்து வெளியே வந்தனர்... பின்னர் அவர்கள் அனைவரும் அணுக்கதிர் படிவை கண்டுபிடிக்கும் இயந்திரத்தை (கன்டாமினேசன் மானிட்டர்) நோக்கிச் சென்றனர்.



8.3%
இது என்ன?
விஜயா அக்கா - ஒவ்வொரு முறையும் நாங்கள் வேலை முடிந்து அணு உலை அறையிலிருந்து வெளிவரும்போதும், இந்த இயந்திரத்தின் வழியே கடந்துச் செல்வோம்... இதன் மூலம், எங்கள் உடைகள் அல்லது உடல் உறுப்புகள் ஏதேனும் மாசடைந்துள்ளதா இல்லையா என்று தெரிந்துக் கொள்ள முடியும்... உங்களுக்கு நினைவிருக்கிறதா, அணு உலையியல் நுழையும் முன்பு நாம் பாதுகாப்பு நடவடிக்கையாக விசேஷ வகை உடைகள் மற்றும் கையுறைகளைப் பயன்படுத்தினோம்.
8.3%
ஆமாம், எனக்கு நினைவுள்ளது.
இப்போது, நீங்கள் அவற்றை நீக்கிவிட்டு, படிவு கண்டுபிடிப்பு கருவி (கன்டாமினேசன் மானிட்டர்) வழியே ஒவ்வொருவராக கடந்துச் செல்லுங்கள்... அப்போது தான் ஏதேனும் படிவு இருந்தால் நம்மால் அவற்றை கண்டுபிடிக்க முடியும்.
அதற்கு பிறகு, அனைவரும் விசேஷ உடைகளைத் திருப்பிக் கொடுத்தனர் பின்னர் கருவியை பெட்டியில் வைத்தனர்.
MAPS
இப்போது அனைவரும் படிவு கண்டுபிடிக்கும் இயந்திரத்தைக் கடந்துச் சென்றனர்.
நீங்கள் இங்கு பச்சைவிளக்கு ஒளிர்ந்தால் பார்த்தால், இது அங்கு எதுவும் மாசு இல்லை என்பதை காட்டுகிறது.
ஆம், இது மிகவும் பாதுகாப்பானது... பல வருடங்களாக, இங்கு வேலை செய்யும் மக்கள் எப்படி பாதுகாப்பாக உள்ளனர் என்று இப்போது எனக்குப் புரிகிறது.
நிச்சயமாக, நீங்கள் நினைப்பது சரி... வாருங்கள், நான் உங்களை டர்பைன் கூடத்திற்கு அழைத்துச் செல்கிறேன் (அனைவரும் டர்பைன் கூடத்தை நோக்கிச் சென்றனர்)



இதைப் பாருங்கள், இது டர்பைன் கூடம். இங்கு டர்பைனின் உதவியுடன் ஜெனரேட்டர்களால் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது.
ஓ! இது எவ்வ....பு பெரிதாக உள்ளது! இங்கு அனைத்து பொருட்களையும் பார்ப்பது உண்மையில் சுவாரஸ்யமானதாக உள்ளது.
அவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்துக் கொள்கின்றனர்
இங்கிருந்து நாங்கள் உங்களை கட்டுப்பாட்டு அறைக்கு அழைத்துச் செல்லப் போகிறோம் (அனைவரும் கட்டுப்பாட்டு அறைக்குள் நுழைந்தனர்)
(கட்டுப்பாட்டு அறைக்குள்... சிலர் வேலை செய்துக் கொண்டிருக்கிறார்கள்...)
இது அணு மின் நிலையத்தின் கட்டுப்பாட்டு அறை... அனைத்து நிகழ்முறைகளும் இங்கிருந்து கட்டுப்படுத்தப்படுகிறது



இந்த பச்சை, சிகப்பு, மஞ்சள் இண்டிகேட்டர் விளக்குகளின் நோக்கம் என்ன?
ரமா அக்கா, இவை அனைத்தும் பல்வேறு காரணிகளைக் கட்டுப்படுத்த, செயல்பாடுகளை கட்டுப்படுத்த எவ்வளவு மின்சாரம் தயாரிக்கப்பட்டது போன்ற மின் சம்பந்தப்பட்ட அளவீடுகளை பதிவு செய்வதற்காக ஆகும்... அதே போல், சில நெருக்கடியான சூழ்நிலையில், மின் நிலைய கருவிகள் நிறுத்தப்பட வேண்டுமென்றால், இங்கிருந்து செயல்படுத்தப்படும். இதனால் மின் நிலையம் அனைத்து நேரமும் பாதுகாப்பாகவே இருக்கும்.
இங்கு யாரேனும் ஒருவர் அனைத்து நேரமும் இருப்பாரா?
ஆம், பொறுப்புள்ள பொறியாளர்கள் மற்றும் மேலதிகாரிகள் போன்ற பயிற்சி பெற்ற அதிகாரிகள் இங்கு 24 மணிநேரமும் வேலையில் இருப்பார்கள்... மேலும், அவர்கள் இயந்திரம் சம்பந்தமான செயல்பாடுகளை இங்கிருந்து கட்டுப்படுத்துவார்கள். இப்போது நான் உங்களை வெளியே அழைத்துச் செல்கிறேன்.
அசோக் குமார் அனைத்து வருகையாளர்களுடன் இணைந்து வெளியே வந்தார்.


இந்த நிகழ்முறையில் ஏதேனும் கழிவு உண்டாகுமா? அவை என்னவாகும்? இது போன்ற கழிவிலிருந்து சில கதிர்வீச்சு உள்ளது என்று நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம்.


நீங்கள் சரியான கேள்வியை கேட்டுள்ளீர்கள்.. அணு மின் நிலையத்தில் மின்சாரத்தை தயாரிக்கையில் மிகக் குறைவான கழிவே உண்டாகும். எரிபொருளை பயன்படுத்திய பிறகு, நாங்கள் வீணான எரிபொருளை பல ஆண்டுகளுக்கு ஆழமான சேமிப்புத் தொட்டிகளில் பாதுகாப்போம். எனவே மாசு பரவாது.. இதற்கு பிறகு தான் நாங்கள் எதிர்கால பயன்பாடுகளுக்குத் திரும்பவும் பயன்படுத்துவோம்... ஆனால், நீங்கள் நிலக்கரி மற்றும் மற்ற ஆதாரங்களை ஒப்பிட்டால், அவற்றின் வீணான பொருட்களான $CO_2$, $SO_2$, $NO_2$ போன்றவை சுற்றுச்சூழலுக்கு மிகவும் அபாயகரமானதாக இருக்கும்.


மேலும் இது போன்ற கழிவை நீக்க நம் நாட்டில் நாம் பல வகையான நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளோம், நாங்கள் இது போன்ற கழிவை பெற்றால், இதனை சிறிய பொட்டலங்களாக்க இவற்றை அழுத்த எங்களிடம் மிக நவீன இயந்திரங்கள் உள்ளன மற்றும் இவற்றை பல ஆண்டுகளுக்கு கான்க்ரீட் தொகுதிகளுக்குள் போட்டுவிடுவோம், பிறகு மேலும் பூமிக்குள் புதைக்கப்படும். அப்போது தான் காற்றில் எந்த கதிர்வீச்சும் பரவாது... உங்களுக்குப் புரிந்திருக்குமென்று நம்புகிறேன்.
ஆமாம், ஐயா.
வாருங்கள்... நான் உங்களை அணு மின் நிலையத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய நீரை எங்கிருந்து எடுக்கிறோமோ அந்த இடத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறேன்.
அனைவரும் தண்ணீர் உட்செல்லும் அமைப்பை நோக்கி நடந்தனர்.


இப்போது நீங்கள் இந்த நிலையத்தில் பயன்படுத்தப்படும் நீரை பெறுவதற்கான மூல ஆதாரம் இது தான் என்று பார்க்கலாம். இந்த நீர் இறுதியாக நீர் நிலைக்கு திரும்பவும் திறந்துவிடப்படும்.
இந்த தண்ணீர் தான் ஆறு, ஏரி அல்லது கடலுக்குள் திரும்ப வெளியிடப்படுகிறதா? இது மிகவும் சூடான நீராக இருக்கக்கூடும், இல்லையா?
இது மீன் மற்றும் மற்ற நீர்வாழ் உயிரினங்களைக் கொல்வதற்கான சாத்தியம் உள்ளதா!
நீரிலும் கதிர்வீச்சுகள் பரவக்கூடும் அல்லவா?
நீங்கள் குடிப்பதற்கும் இதே நீரை பயன்படுத்துவீர்களா?



(முத்து கவனமாகப் பார்க்கிறார், தண்ணீரில் சில மீன்கள் நீந்தி கொண்டிருப்பதைப் பார்த்தார்)
என்னை மன்னித்துவிடுங்கள், ஆனால் ஒரு நேரத்தில் ஒருவர் மட்டும் கேள்வி கேளுங்கள்... நான் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிப்பேன். ஆம், ஆனால் அணு மின் நிலையத்திலிருந்து வரும் நீர் சற்று சூடாக இருப்பது இயற்கைதான், ஆனால் இது குளிர்விக்கும் டவர்களில் குளிர்விக்கப்பட்ட பிறகு தான் நீர்நிலைக்குத் திறந்துவிடப்படும்... அப்போது தான் மீன் அல்லது மற்ற எந்த உயிரினத்திற்கும் பாதிப்புகள் ஏற்படாது. மேலும் மீன்கள் இந்த இடத்தில் வளர்கின்றன. மேலும் இங்கு கதிர்வீச்சு இல்லை என்ற கருத்தை குறித்துக் கொள்ளுங்கள்.
நிச்சயமாக... குடிநீரைப் பொறுத்தவரையில்... நாம் அனைவரும் ஒரே நீரை குடிக்கிறோம்... மற்ற நீரைப் போல இதுவும் சாதாரண நீர் தான்... இது நாம் நம் வீடுகளில் நீர் வடிகட்டிகள் மூலம் பெறுவதைப் போன்றது... சில அடிப்படை சிகிச்சையின் மூலம் இந்த நீர் குடிக்கத்தக்க நீராகிறது... இந்த சிகிச்சைக்குப் பிறகு இது அருகில் உள்ள காலனிகள், வீடுகள் ஆகியவற்றை அடைகிறது... புரிகிறதா!
ஆம், நாங்கள் இங்கு நிறைய மீனை பார்க்கிறோம்... சிலர் வதந்திகளைப் பரப்புகின்றனர் என்று இதிலிருந்து தெரிகிறது.
நாங்கள் இங்கு குடித்த நல்ல தண்ணீர் இங்கிருந்து பெற்றது தானா?
ஆம், இங்கிருந்து தான்... நீங்கள் சரியாகக் கூறினீர்கள்... ஹா, ஹா, ஹா! (சிரிக்கிறார்)


மேலும் ஒரு விஷயம். நீங்கள் கடலின் அருகில் எப்படி வீட்டை உயரமாக கட்டுகிறீர்களோ அதே போல் அணு மின் நிலையமும் கடல் மடத்திலிருந்து உயரமாக அமைக்கப்பட்டிருப்பதையும் நீங்கள் பார்க்களாம். இது நீர் அலைகளிலிருந்து நிலையத்தை பாதுகாப்பதை உறுதி செய்கிறது. இதனால் நாம் சுனாமி பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை
நீங்கள் கூறுவது சரி ஐயா... அனைத்தும் எங்கள் கண் முன்னால் நடக்கிறதே.
இப்போது அணு மின் நிலைய சுற்றுலா முடிந்துவிட்டது. இப்போது நான் உங்களை பணியாளர் தங்கியிருக்கும் நகரியத்துக்கும் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிஙளுக்கும் அழைத்துச் செல்கிறேன்... ஆனால் அதற்கு முன் நான் உங்களை அதிக மகிழ்ச்சியளிக்கும் ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்கிறேன்.
அனைவரும் அங்கிருந்து நகர்ந்தனர். அவர்கள் சற்று தூரத்தில் படகை பார்த்தனர். அங்கு சில மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.
எப்படி இருக்கிறீர்கள் நந்து? இப்போதெல்லாம் நீங்கள் அதிக மீன்களைப் பிடிப்பதைப் பார்க்கிறேன். இல்லையா?
மதிய வணக்கம், ஐயா. ஆம், இந்த பெருமை உங்களை தான் சேரும் ஐயா. நீங்கள் எங்களுக்கு மீன் பிடிக்க இந்த படகுகளை கொடுத்திருக்காவிட்டால், நாங்கள் பட்டினி கிடந்திருப்போம்... நாங்கள் அனைவரும் உங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்.


இல்லை, இல்ல, அப்படி எதுவுமில்லை... இந்த கிராமத்தினர் அனைவரும் பூஞ்சோலை கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் உங்கள் படகில் பயணிக்க விரும்புகிறார்கள்... நான் அவர்களுக்கு இங்குள்ள பழத் தோட்டத்தில் உள்ள மாம்பழங்கள் மற்றும் மற்ற பழங்களைக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் தயாரா?
அப்படியே, அனைவரும் நகர்ந்தனர் (படகு சவாரிக்குப் பிறகு அவர்கள் ஒரு அழகான இடத்தை அடைந்தனர்)
...பழங்கள் நிறைந்த ஒரு அழகான தோட்டம்... அங்கு மாம்பழம், கொய்யா பழம், வாழைப்பழம், முலாம் பழம் போன்ற பல்வேறு பழங்களின் மரங்கள் பல இருந்தன.
நாம் எங்கு இருக்கிறோம்? இது சொர்க்கம் போல் உள்ளது. ஆ! மாமரம், கொய்யா மரம், வாழை மரம் மற்றும் முலாம் பழ மரம்... இது அற்புதம்!... இவ்வளவு பழ மரங்களா... எங்களுக்கு ஏற்கனவே பசிக்கிறது.



இப்போது நாம் அனைவரும் இங்குள்ள பழங்களை சாப்பிடலாம்.
(சில மாம்பழங்களை சாப்பிடும்போது) ஆ! இது மிக இனிப்பாக, சாறு நிறைந்து, சுவையாக உள்ளது.... இது பார்க்கவும் அழகாக உள்ளது!
நான் வாழைப்பழத்தை மட்டும் சாப்பிட போகிறேன்.
ஆனால் ஐயா, அணு மின் நிலையம் மிக அருகில் இருந்தும், நாங்கள் இங்கு பல பழங்களைப் பார்க்கிறோம்... அதுவும், மிக சுவையான பழங்கள்! கதிர்வீச்சு எப்படி இதனை பாதிக்காமல் உள்ளது?
ஆம், இதை தான் நான் இவ்வளவு நேரம் விவரிக்க முயற்சி செய்தேன். அதாவது அணு மின் நிலையத்தை சுற்றியுள்ள சூழல் முற்றிலும் தூய்மையானது மற்றும் பசுமையானது, இது பழங்கள் மற்றும் தோட்டங்களில் எந்தவித பாதிப்புகளையும் ஏற்படுத்தாது. குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை நாங்கள் இவற்றின் மாதிரிகளை எடுத்து, ஆய்விற்காக எங்கள் ஆய்வகங்களுக்கு அனுப்புவோம். இதனால் நாங்கள் தூய்மையை உறுதி செய்கிறோம். மேலும் விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால், எங்களால் இங்கு தயாராகும் பழங்களின் தரத்தை அதிகரிக்க முடிகிறது. எனவே மாம்பழங்கள், வாழைப்பழங்கள், கொய்யாபழங்கள் என அனைத்து பழங்களுமே சுவையாக உள்ளன. நீங்கள் நிலையத்தின் உள்ளே ஏற்கனவே பார்த்ததைப் போலவே, இங்கும் எந்த கதிர்வீச்சோ, மாசுவோ கிடையாது, எனவே இங்கு அணு உலையால் பாதிப்பு ஏற்படும் என கூறவே முடியாது
27


ஆம், சேகர், நீ சரியாக கூறினாய்... நாம் இப்போது நம்முடைய தாவரங்கள், மீன், மாமரங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவை அணு மின் நிலையத்திற்கு அருகில் பாதுகாப்பாக உள்ளன என்பதை உறுதி செய்து க் கொள்ளலாம். அது மட்டுமல்லாமல், இதனால் எந்த பக்கவிளைவுகளும் ஏற்படாது.
அனைவரும் சுற்றி பார்த்தனர்... பழங்களை சாப்பிட்டு, அங்கு மகிழ்ச்சியாக இருந்த பிறகு, திரும்பவும் வந்து படகில் அமர்ந்தனர்.
இன்று மறக்கவே முடியாத சுற்றுலாவாக உள்ளது... இதனை நாங்கள் மறக்கவே மாட்டோம்.
இப்போது, நான் உங்களை அருகில் உள்ள கிராமம் மற்றும் பணியாளர் தங்கியிருக்கும் நகரியத்திற்கு அழைத்துச் செல்ல போகிறேன்.
(படகு கரையை அடைந்தது... அனைவரும் நகரியத்தை நோக்கி நடந்தனர். வழியில் அவர்கள் ஒரு வயதானவர் தனது பேரனை கைகளில் தூக்கிச் செல்வதைப் பார்த்தனர்)
வணக்கம் திரு. சிவக்குமார் சார், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்! என்ன விஷயம்? நீங்கள் உங்கள் பேரனுடன் எங்கே போகிறீர்கள்?
வணக்கம் ஐயா, சும்மா சுற்றி வர செல்கிறோம்... நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? இவ்வளவு பேர் உள்ளனர்? நீங்கள் எங்கு போகிறீர்கள்?


விசேஷமாக எதுவுமில்லை... இவர்கள் அனைவரும் பூஞ்சோலை கிராமத்திலிருந்து வந்திருக்கும் எங்கள் நண்பர்கள்... நான் இவர்களை நகரியத்திற்கும் நம் கிராமத்திற்கும் அழைத்து செல்கிறேன்... முத்து ஐயா, இவர் திரு. சிவக்குமார் ஐயா... இவர் 40 வருடங்களாக அணு மின் நிலையத்தில் தொழிலாளியாக இருந்தார்... இவர் ஓய்வு பெற்ற பிறகு, இங்கேயே தங்கிவிட முடிவு செய்தார். அவருக்கு ஒரு மகன், ஒரு மகள் மற்றும் பேரனும் உள்ளான். இவருடைய மகள் வெளிநாட்டில் படிக்கிறாள். இவருடைய மகன் மிகவும் பிரபலமான நிறுவனத்தில் பிரதிநிதியாக வேலை செய்கிறார்...
திரு. சிவக்குமார் இப்போதும் மிகவும் ஆரோக்கியமாக இருப்பதை நீங்கள் பார்க்கலாம்.
ஆம், யாருமே இவர் ஓய்வு பெற்றுவிட்டார் என்பதையும், 40 ஆண்டுகள் அணு மின் நிலையத்தில் வேலை செய்தார் என்பதையும் நம்பவே மாட்டார்கள்.
(திரு. சிவக்குமாரிடம் பேசிய பிறகு, அவர்கள் அனைவரும் தொடர்ந்து சென்று, கிராமத்தைப் பார்த்தனர், வழியில் நன்றாக பராமரிக்கப்பட்ட சாலைகள், கால்வாய்கள், கழிப்பறைகள் மற்றும் பிற பொது இடங்களையும் பார்த்தனர்...)


ஆ! இந்த தெருக்கள் மிகவும் தூய்மையாக நன்றாகப் பராமரிக்கப்பட்டுள்ளன, இங்கு கால்வாய்களும் உள்ளன!
அங்கே பாருங்கள், குடி நீருக்காக, பல இடங்களில் கைப் பம்புகள் உள்ளன
இவை அனைத்தும் இங்குள்ளவர்களால் செய்யப்பட்ட முன்னேற்றமா?
ஆம்... இந்த அனைத்து முன்னேற்றமும் இங்கு அணு மின் நிலையத்தை நிறுவிய பிறகு சாத்தியமானது.
ஆம், மாமா, நான் உங்களிடம் கூறவில்லையா?


அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி
சற்று நேரத்தில், அவர்கள் ஒரு பள்ளியைப் பார்த்தனர்... அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி. இங்கு புத்தகங்கள், நோட்டுபுத்தகங்கள் மற்றும் பைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.
ஆ! இந்த கிராமத்தில் பெண்களுக்குத் தனி பள்ளி உள்ளது... எங்கள் கிராமத்தில் ஆண்களுக்குக் கூட பள்ளி கிடையாது... இங்கு பாருங்கள், பெண்களும் பள்ளிக்குச் செல்கிறார்கள்!
(மேலும் செல்கையில், அவர்கள் தையல் மையத்தைப் பார்க்கின்றனர், அங்கு அவர்கள் பல பெண்கள் தையல் கற்றுக் கொள்வதைப் பார்க்கிறார்கள்)
सिलाई घर
ஓ! இது தையல் பள்ளி. இவர்கள் அனைவரும் இந்த தையல் இயந்திரங்களை எங்கிருந்துப் பெற்றனர்?
நாங்கள் தன் அணு மின் நிலையத்தாரின் உதவியோடு இவர்களுக்கு அளித்துள்ளோம். இதனால் அவர்கள் சுயதொழில்முனைவோராகலாம்... அவர்கள் அணு மின் நிலையத்தில் பயன்படுத்தப்படும் உடைகளைத் தயாரிக்கிறார்கள். நாங்கள் அவற்றை சந்தை விலைக்கு இந்த கிராமத்தினரிடமிருந்துப் பெற்றுக் கொள்கிறோம்.
ஓ!... மிகவும் நல்லது.


மேலும், அவர்கள் ஆரம்ப மருத்துவ மையத்தில் சிறிது கூட்டத்தைப் பார்த்தனர்... திடீரென்று அவர்கள் ஒரு பெண் மருத்துவர் வெளியே வருவதைப் பார்த்தனர்...
டாக்டர், அம்மா, எப்படி இருக்கிறீர்கள்?
HOSPITAL
ஹலோ! குமார் ஐயா, நான் நன்றாக உள்ளேன். நீங்கள் கூறுங்கள்.
இன்று இங்கு என்ன இவ்வளவு கூட்டம்? ஏதேனும் நல்ல செய்தியா?
ஆம் ஐயா... இன்று, மீனவர் பாண்டுவின் மனைவி பங்கஜமிற்கு இரட்டை குழந்தை பிறந்துள்ளது... அனைவரும் அவர்களை வாழ்த்த இங்கு வந்துள்ளனர்... அதனால் தான் இங்கு கூட்டம்.
அற்புதம்! அவர்களுக்கு என் வாழ்த்துக்களை கூறிவிடுங்கள்.
இப்போது பார்த்தீர்களா விஜயா அக்கா கவிதா அத்தை கூறியது தவறு. நீங்கள் அணுமின் நிலையத்தைச் சுற்றி எந்த கதிர்வீச்சு பாதிப்பும் இல்லை என்பதை உங்கள் கண்களாலேயே பார்த்துவிட்டீர்கள்... இல்லையென்றால், ஃபல்வாவால் தாயாகியிருக்க முடியாது.
வாருங்கள்... நான் உங்களுக்கு நகரியத்தை காட்டுகிறேன். நகரியம் சற்று தள்ளி உள்ளது. எனவே நாம் அங்கு பேருந்தில் செல்லலாம்.
ஆம் சம்பத், நீகூறியது சரி. நான் நம் கிராமத்திற்குத் திரும்பிச் சென்றதும் அனைவரிடமும் இதை கூறுவேன்.


அனைவரும் தங்கள் இருக்கையில் அமர்ந்தனர். பேருந்து நகரியத்தை அடைந்தது...
(நகரியத்தின் தோற்றம்) - வீடுகள், பொது இடங்கள், கடைகள், தார் சாலைகள், விளக்குகள் மரங்கள் ஆகியவை சுற்றி இருந்தன. கார்களும் இருந்தன.
ஆ... இது மிகவும் அழகான நகரியம். அனைத்தும் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி உள்ளது. மேலும் இவை மிக அழகாகத் தயாராகியுள்ளன... அனைத்து இடங்களும் தூய்மையாகப் பராமரிக்கப்படுகிறது.
இந்த நகரியத்தைப் பார்தால், இங்கேயே தங்கிவிடத் தோன்றுகிறது! (அனைவரும் சிரித்தனர்...)
ஆம், ஐயா... சேகர் எங்களிடம் முன்பே கூறியிருந்தான், நாங்கள் அதை நம்பவில்லை. ஆனால் இப்போது, நாங்களே நேரில் வந்து அணு மின் நிலையத்தைப் பார்த்த பிறகு, எங்களுக்கு எந்த வித சந்தேகங்களோ, தவறான அபிப்பிராயங்களோ இல்லை.
அணுமின் நிலையத்தால் அருகில் உள்ள கிராமங்கள் மற்றும் சுற்றுப்புறங்கள் எப்படி பயனடைந்துள்ளன என்று நீங்கள் இப்போது பார்த்தீர்கள். உங்கள் அனைவருக்கும் போதுமான தகவல் கிடைத்திருக்குமென்று நம்புகிறேன்... மற்றும் இந்த சுற்றுலா அணு மின் நிலையம் பற்றிய உங்கள் சந்தேகங்கள் மற்றும் தவறான அபிப்பிராயங்களை நிச்சயம் தீர்த்திருக்குமென்று நம்புகிறேன்.
ஆம், அனைத்து சந்தேகங்களும், தவறான அபிப்பிராயங்களும் இப்போது தெளிவாகிவிட்டன.
ஆம், இப்போதிலிருந்து, நாமும் குடிசைகளில் வசிக்க வேண்டாம்... நாம் அனைவரும் நவீன வீடுகளில் தங்கலாம் (அனைவரும் சிரித்தனர்).
இப்போது, நாம் அனைவரும் முன்னேற்றம் என்றால் என்னவென்றும், ஏன் முன்னேற்றம் அவசியம் என்றும் தெரிந்துக் கொண்டோம்.
33




முத்து மற்றும் கிராமத்தினர் அணு மின் நிலையத்திற்கு சுற்றுலா சென்று வந்த பிறகு என்ன நடக்கிறது?

முத்து மற்றவர்களுக்கு அணு மின் நிலையம் பற்றி கூறிய பிறகு என்ன நடக்கிறது?

அவர்களுடைய கிராமத்தில் அணு மின் நிலையம் நிறுவப்படுமா?

"அணு சக்தி... தேசத்தின் சக்தி
தூய்மையான சக்தி... தூய்மையான இந்தியா"

முத்துவின்
# மாற்றம்...
பூஞ்சோலை எப்படி ஒரு சிறந்த கிராமமாக மாறியது என்பது பற்றிய கதை




நியூக்லியர் பவர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிட்டட்
(ஒரு இந்திய அரசு முனைவகம்)



எண்ணக்கரு, கதை மற்றும் கதை இயக்கம்

ஏதேனும் கருத்துக்கள் மற்றும் பின்னூட்டத்திற்கு,
தயவு செய்து தொடர்புக் கொள்ளவும்

**அம்ரிதேஷ் ஷ்ரிவஸ்தவா**

amritesh@npcil.co.in



## வெளியிடுபவர்

நிறுவனத் திட்டமிடல் மற்றும் நிறுவனத் தொடர்புகள்

6-அ-14, விக்ரம் சாராபாய் பவன், அணுஷக்தி நகர், மும்பை- 400 094, தொ.பே.: 2599 2623

மின்னஞ்சல் : skjena@npcil.co.in

www.npcil.nic.in